Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பராங்குச நாயகியின் தூது

**முனைவர் செ.கற்பகம்**
**இணைப்பேராசிரியர், இசைத்துறை,**
**தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

46

**ஆய்வுச் சுருக்கம்**

தெய்வத்தமிழ் வளமுரைக்கும் வைணவ நூல்களுள் நாலாயிர திவ்விய பிரபந்தம் பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பட்ட சிறப்புமிகு நூலாகும். இப்பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான நம்மாழ்வார் பாடிய நான்கு பிரபந்தங்களில் திருவாய்மொழியும் ஒன்றாகும். நான்காம் ஆயிரமாக விளங்கும் இத்திருவாய்மொழியில் 27 பாசுரங்களில் ஆழ்வார் பராங்குச நாயகி நிலையில் நின்று மதுர பக்திப் பாசுரங்களைப் பாடியுள்ளார். இவற்றில் நான்கு தூதுவிடுக்கும் திருவாய் மொழிகளாகும். இவற்றில் 44 பாசுரங்கள் உள்ளன. பறவை இனங்களையும், மேகத்தையும், நெஞ்சையும் தூதுவிடுக்கும் பொருள்களாகக் கருதி பராங்குச நாயகி பாடிய இப்பாசுரங்கள் பிற்கால தூது இலக்கிய வகைக்கு முன்னோடியாக அமைந்துள்ளன. இவை பண்டைய பண், தாளத்துடனும் இன்றைய இராகத்தொடும் பாடப்பட்டு வருகின்றன. பாடுவதற்கும் ஆடுவதற்குரிய இத்தெய்வத் தமிழ்ப் பாசுரங்களைக் கற்போம்.வளம் பெறுவோம்.

**திறவுச்சொற்கள்**

திருவாய்மொழி, திருப்பாசுரம், உள்ளுறை உவமை, திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருமொழி, மதுரபக்தி

**முன்னுரை**

**திருவழுதி நாடென்றும் தென்குரு கூரென்றும்**
**மருவினி யவன்பொருந லென்றும் – அருமறைகள்**
**அந்தாதி செய்தானடி யினையே எப்பொழுதும்**
**சிந்தியாய் நெஞ்சே தெளிந்து -தனியன்**

பன்னிரு ஆழ்வார்களில் நம்மாழ்வாரும் ஒருவராவார். இவர் நெல்லை மாவட்டத்தில் பொருநை நதிக்கரையில் உள்ள ஆழ்வார் திருநகரி எனப்படும் திருக்குருகூரில் அவதரித்தவர். இவர் தந்தையார் காரியார். தாயார் உடைய நாச்சியார். வேளாளர் குலத்தில் பிறந்தவர். வைகாசித் திங்கள் பௌர்ணமியுடன் கூடிய விசாக நட்சத்திரத்தில் தோன்றினார். பெற்றோர் இட்ட பெயர் மாறன். பிறந்த நாள் முதல் பாலுண்ணுதல், கத்துதல் முதலிய இயல்பின்றி இருந்தார். பெற்றோர் பன்னிரண்டாம் நாள் அக்குழந்தையைப் பொலிந்து நின்றபிரான் முன் இட்டனர். அக்குழந்தை

அங்குள்ள புளியமரத்தடியில் சென்று அமர்ந்தது. அக்குழந்தை பதினாறு வயது வரை கண்விழித்தல் பேசுதல் முதலியன ஒன்றுமின்றி இறைவனை நினைந்திருந்தது. அயோத்திய முதலிய இடங்கட்குச் சென்ற மதுரகவி ஆழ்வார் தென்திசையில் தோன்றிய பேரொளியை வழிகாட்டியாகக் கொண்டு திருநகரி வந்தார். ஆழ்வாரைக் கண்டார். ஒரு சிறு கல்லால் ஒலியுண்டாக்கினார். ஆழ்வார் கண் விழித்தார். ''செத்தத்தில் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்'' என்று மதுரகவி கேட்டார். "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று விடையளித்தார். மதுரகவி மகிழ்ந்து ஆழ்வாரையே ஆசானாகக் கொண்டு பணிசெய்து வந்தார்.

நம்மாழ்வாரை மாறன், காரிமாறன், சடகோபன், பராங்குசன், நம்மாழ்வார், வகுளாபரணர், மகிழ்மாலையன் என்ற பெயர்களால் அழைப்பர். பெற்றோர் இட்ட பெயர் மாறன். காரியாரின் மகன் ஆதலால் காரிமாறன் என்பர். குழந்தைப் பிறந்த உடன் வந்து சேர்ந்து முன்னை உணர்வைப் போக்கி விடுவதாகிய சடம் என்ற வாயு இவரையும் சேர்வதற்கு வர, இவர் அதனைக் காணாதபடி, தம்மை அணுகாதபடி போக்கிக் கொண்டமையால் சடகோபன் என்ற பெயர் பெற்றார். இறைவன் தமது அருளிச் செயல்களாகிய அங்குசத்தால் பரமனாகிய களிறு தம் வசமாகும் படிச் செய்தமையால் பராங்குசன் என்று அழைக்கப்பட்டார். இவருக்கு நம்மாழ்வார் என்ற பெயரை இறைவனே அருளினார் என்பர். மகிழம்பூ மாலையை விரும்புவார். ஆதலால் மகிழமாலையன், வகுளாபரணர் என அழைக்கப் பெற்றார்.[1]

இவர் அருளியுள்ள திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்ற நான்கு பிரபந்தங்களை நால் வேதங்கள் என்று போற்றுவர். இவற்றுள் திருவிருத்தம் அகத்துறை இலக்கியமாகும். திருவாசிரியம் பாவால் பெற்ற பெயர். பெரிய திருவந்தாதியில் 87 பாடல்கள் வெண்பா யாப்பில் அமைந்துள்ளன.

திருவாய்மொழி செந்தமிழ் வேதமாகும். நூறு பதிகங்கள் கொண்டுள்ளது. பண்டைய பண், ஒத்து, இன்றைய இராக, தாள அமைதியுடன் விளங்கும் பாசுரங்களாகும். முதல் பாசுரத்தின் முதல் சீரும், இறுதிப் பாசுரத்தின் இறுதிச் சீரும் மண்டலித்து அமைந்துள்ளன. **உயர்வற** முதல் பத்து (2675) **உயர்ந்தே** (3776) . ஒவ்வொரு பதிகமும் ஒரு திருவாய் மொழியாகும். ஒவ்வொரு திருவாய் மொழியின் இறுதியிலும் திருக்கடைக்காப்புப் பாசுரம் உள்ளது. அதில் ஆழ்வாரின் பெயர் முத்திரையாக இடம் பெற்றுள்ளது. "குருகூர்ச் சடகோபன் சொல் நிரல்நிறை ஆயிரத்து இவை பத்தும் வீடே". [2]

ஆழ்வார் பாசுரங்களில் தானான தன்மையில் நின்று ஆழ்வார் பேசும் பாசுரங்களும், பெண் தன்மை ஏற்பட்டுப் பிராட்டியாக நின்று பேசும் பாசுரங்களும் உள்ளன. தானான நின்று பாடியதனைப் புறத்துறைப் பாடல்கள் என்றும், பெண்ணாக நின்று பாடியவற்றை அகத்துறைப் பாடல்கள் என்றும் குறிப்பிடுவர்.[3] இதனை ''ஆசாரிய ஹிருதய நூல்" "ஞானத்தில் தம் பேச்சு பிரேமத்தில் பெண் பேச்சு" என்று குறிப்பிடும். இவ்வகையில் அமையும் அகத்துறைப் பாசுரங்கள்

மூன்று வகையில் அமைந்துள்ளன.

1) தாய்க்கூற்றுப் பதிகங்கள் -7, 2) மகள் (தலைவி) கூற்றுப்பதிகங்கள் -17, 3) தோழி கூற்றுப் பதிகங்கள் -3. இம்மூன்று வகையில் 27 பதிகங்கள் அகத்துறை பதிகங்களாக உள்ளன. இந்நிலையில் இவரைப் **"பராங்குச நாயகி"** என்று அழைப்பர். இவற்றுள் **நான்கு** பதிகங்கள் தூதுவிடும் பதிகங்களாக உள்ளன. இவை நான்கும் மகள் பாசுரங்களாக (தலைவி கூற்றில்) அமைந்துள்ளன.

| | | |
|---|---|---|
| 1. அஞ்சிறை மடநாராய் (1:4) நாரை தூது முதலியன | 2708-2718 | - 11 |
| 2. வைகல் பூங்கழிவாய் (6:1) குருகு முதலியன | 3227-3237 | -11 |
| 3. பொன்னுலகாளீரோ (6:8) பறவைக்கூட்டங்கள் | 3304-3314 | -11 |
| 4. எம்காணல் அகம் கழிவாய் (9:7) நாரை முதலியன | 3623-3633 | -11 |
| | | ------- |
| | | 44 பாசுரங்கள் |
| | | ------ |

இந்த நான்கு திருவாய் மொழிகளில் உள்ள 44 பாசுரங்கள் தூதுப் பாசுரங்களாக உள்ளன. தலைவி பறவைகளையும், மேகத்தையும், தன் நெஞ்சையும் தூதுவிடும் நிலையில் அமைந்துள்ளன.

| | |
|---|---|
| நாரை : பாசுர எண்கள் | - 2708, 3228, 3312, 3623 – 4 |
| குயில் : பாசுர எண்கள் | - 2709, 3232 – 2 |
| அன்னம் : பாசுர எண்கள் | - 2710, 3230, 3231, 3235, 3313, 3632 – 6 |
| அன்றில் : பாசுரங்கள் | - 2711 – 1 |
| குருகு : பாசுரங்கள் | - 2712, 3227, 3311, 3624, 3629, 3631 – 6 |
| வண்டு, தும்பி பாசுரங்கள் | - 2713, 3306, 3207, 3236, 3628, 3630-6 |
| கிளி பாசுரங்கள் | - 2714, 3233, 3305, 3308 – 4 |
| நாகணவாய்ப்பறவை:பாசுரங்கள் | - 2715, 3236 – 2 |
| பூவை : பாசுரம் | - 3309 - 1 |
| பாவை : பாசுரம் | - 3310 - 1 |
| நெஞ்சு : பாசுரம் | - 2717 - 1 |
| பறவை பாசுரங்கள் | - 3229,3304 - 2 |
| மேகம் பாசுரம் | - 3626 - 1 |
| முகில் பாசுரம் | - 3627 - 1 |
| வாடைக்காற்று | - 2616 - 1 |

உயிரினங்கள் உயிரினம் அற்றவைகள் என்ற நிலைகளில் 15 தூது விடுக்கப்பட்டனவாக உள்ளன.

தலைவனைப் பிரிந்திருக்கும் பொழுது ஏற்படும் காம மயக்கத்தால் தலைவி அஃறிணைப்

பொருள்களையும், பிறவற்றையும் தலைவன் பால் தூது விடுக்கும் நிலையில் கவி இயற்றும் மரபுளது. காமம் மிக்க கழிபடர் கிளவியால் தூது விடுப்பர். இவ்வகையில் அமையும் தூது இலக்கியங்கள் பல உள்ளன. தூது விடுக்கும் நிலையில் புறப் பாடல்களும் உள்ளன. இறைவனைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் கருதிப் பாடும் மரபு தெய்வத்தமிழ்ப் பாடல்களிலும் காண்கிறோம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்றோர் பாடிய சைவத்தமிழ் இலக்கியங்களிலும் இவ்வகையில் அமைந்த பதிகங்களும் உள்ளன.

திருஞானசம்பந்தர் அருளியுள்ள பழந்தக்கராகப் பண்ணில் அமைந்த திருத்தோணிப்புரத்துப் பதிகமும் (திருமுறை1:60) திருநாவுக்கரசர் அருளியுள்ள பழந்தக்கராகத் திருப்பழனம்(4:12) பதிகமும் தூதுவிடுக்கும் பதிகங்களாக உள்ளன. ஆன்மாவின் பெண் தன்மையை மிகுதிப்படுத்தி இறைவனின் இடையறாப் பேரின்பத்தை அடைந்திட தூது விடுக்கும் பாடல்களாக இவை உள்ளன.

**பராங்குச நாயகி விடும் துது**

திருவாய்மொழியில் பராங்குச நாயகி நிலையில் நின்று நம்மாழ்வார் பாடிய தூதுப் பாசுரங்களின் அமைப்பும் அழகும் சிறப்புடையன. ஆசாரிய இருதயம் நூல் (சூத்.150) பறவைகளைத் தூது விடுப்பதற்கு உட்பொருளையும் உரைக்கின்றது. பறவைகள் இரு சிறகுகளைக் கொண்டுள்ளன. விரைவாகச் செல்லும் தன்மையுடைன. இரு சிறகுகள் ஆசாரியர்களாகவும், ஒருசாலை மாணாக்கர்களாகவும், புத்திரர்களாகவும் இறைவனை அடையும் பேற்றுக்குத்துணை இருப்பர் என்றும் கருதுவர். இப்பறவைகளில் அன்னமாக வைணவ ஆசாரியர்களில் செல்வ நம்பி, பெரியாழ்வார், நாத முனிகள், ஆளவந்தார் ஆகியோர் உள்ளுறைப் பொருள்களாகக் கருதப்படுவர்.

வண்டு-நாரதர், திருப்பாணர், அரையர் முதலியோரையும், கிளி, பூவை, குயில்-மதுரகவிகள், தொண்டரடிப் பொடியாழ்வார், கூரத்தாழ்வார், திருமலையாண்டான், எம்பார், அருளாளப் பெருமாள், எம்பெருமானார் முதலியோரையும், நாரை, குருகு- குலசேகராழ்வார், ஆசாரிய பதத்தில் உள்ளோர்களையும், மேகம்- திருமழிசையாழ்வார், திருமங்கையர், இராமநேனுசர் முதலியோரையும் உள்ளுறைப் பொருளாக ஆசாரிய இருதயம் (151-156) குறிப்பிடுகிறது. [4]

**முதற் பத்து- நான்காம் திருவாய்மொழி**

முதல் பத்து நான்காம் திருவாய்மொழியில் பாசுரங்கள் பதினொன்று உள்ளன. பண்:நட்டப்பாடை, தாளம் – ஏழொத்து, கண்ட ராகம், ஆதிதாளத்தில் அமைந்துள்ளதனைச் சென்னை மயன் பதிப்பகம் ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிர திவ்ய பிரபந்தம் நூலின் ப.606 வழி அறிகிறோம். இது பாடுவதற்குரிய பதிகம் நாட்டிய அரங்கில் ஆடுவதற்குரியதாகவும் அமைந்துள்ளது.

இத்திருமொழியில் உள்ள 11 பாசுரங்களில் இறைவனுடைய எளிமைப் பண்பை 1-3

பாசுரங்களிலும், மேலும் பராங்குச நாயகி நாரை, குயில், அன்னம், அன்றில், குருகு, வண்டு, கிளி, நாகணவாய்ப் பறவை, வாடைக்காற்று, நெஞ்சு ஆகியனவற்றைத் தூதுவிடுக்கும் நிலையிலும் உள்ளன.

பெருமான் தன் சீலகுணத்தால் ஆழ்வாருடன் கலந்தார். பின் அவரிடமுள்ள குற்றங்களைக் கண்டார். அதனால் அவரை வெறுத்துப் பிரிந்தார். தன்னுடைய பிழைகள் அவனுடைய பொறுக்கும் பண்பையும் மறப்பித்தன என்று கருதிய பராங்குச நாயகி பெருமானின் அப்பெருங்குணத்தைச் சிறிது நினைப்பூட்டிவிட்டால் போதும் என்று எண்ணி பறவைகளைத் தூது விடுகிறாள்.

**அஞ்சிறைய மடநாராய்! அளியத்தாய்! நீயும் நின்**
**அஞ்சிறைய சேவலுமாய் ஆஆ என்றெனக்கு அருளி**
**வெஞ்சிறைப்புள் உயர்த்தாற்குஎன் விடுதூதாய்ச் சென்றக்கால்**
**வன்சிறையில் அவன் வைக்கின் வைப்புண்டால் என்செயுமோ (பாசுரம் 2706)**

அழகிய சிறகுகளையும் மடப்பக் குணத்தையும் கொண்ட கருணையுள்ள நாரையே! அழகிய சிறகுடைய உன் சேவலுடன் எனக்காக ஐயோ என்று இரங்கமாட்டாயா? எனக்கு நீ அருள் செய்து கருடக் கொடியானிடம் என் பொருட்டுத் தூது செல்வாயாக. ஒருவேளை அவன் உங்கள் முகம் பார்க்காமல் கொடிய சிறையில் வைத்துவிட்டாலும் எனக்காக அவ்விருப்புக்கு இசைவீர்களா? நீங்கள் அதற்குச் சம்மதித்தால் ஒரு குற்றம் ஆகிவிடாது என்று இப்பாசுரம் குறிப்பிடுகிறது. நாரையைத் தூதுவிடுக்கும் நான்குப் பாசுரங்கள் திருவாய்மொழிகளில் உள்ளன. (1708, 3312, 3228, 3623)

இத்திருவாய்மொழியின் 11வது பாடல் திருக்கடைக் காப்பாக அமைந்துள்ளது. பலசுருதி பலன் உரைக்கும் பாசுரமும் உள்ளது. மேலும் இத்திருமொழி பாசுரங்கள் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன.

எம்பெருமான் அளவில்லாத ஏழு உலகங்களுக்கும் நாயகன் கண்ண பெருமானான அவனை வளம் மிகுந்த வயல் சூழ்ந்த திருக்குருகூர் சடகோபன் மனம் பொருந்தப் புகழ்ந்து பாடிய ஆயிரம் பாசுரங்கள் பத்தும் சொல்வளம் மிக்கவை. இவற்றைப் பயில்வதின் மூலம் வீட்டின்பப் பெருவளத்தைப் பெறலாம்.

**அளவியன்ற ஏழுலகத்தவர் பெருமான் கண்ணனை**
**வளவயல்சூழ் வண்குருகூர்ச் சடகோபன் வாய்த்துரைத்த**
**அளவியன்ற அந்தாதி ஆயிரத்துள் இப்பத்தின்**
**வலிவுரையால் பெறலாகும் வானோங்கு பெருவளமே (பா.2718)**

**ஆறாம் பத்து – முதல் திருவாய்மொழி**

ஆறாம் பத்து முதல் திருவாய் மொழியில் அமைந்துள்ள 11 பாசுரங்களில் குருகு, நாரை, பறவை, அன்னம், குயில், நாகணவாய்ப் பறவை, வண்டு போன்றனவற்றைத் தூதுவிடுக்கிறார்.

இப்பதிக முன்னுரையில் நம்பின்னை சில வினாக்களை எழுப்பியுள்ளார். தூதுவிடுவது அறிவின் செயலா? நைப்பாசையின் செயலா? அன்றி அறிவின்மையின் செயலா? உறவில்லா பறவைகள் காரியம் செய்யுமோ? ஒருமுறை போக்கியவள் மீண்டும் தூது போக்குதல் ஏன்? என்கிறார்.[5]

திருவண்வண்டூர் பெருமான் மீது பரங்குச நாயகி தூது விடுக்கும் பதிகமாக இது அமைந்துள்ளது. இறைவன் திருவடிகளில் சரண்புகும் நிலை இங்கு குறிப்பிடப்படுகிறது.

புன்னை மரத்தின் மேல் தங்கி இருக்கின்ற அழகிய குயில்களை யான் போற்றி இருந்தேன். திருவண்வண்டூர் என்னும் திருத்தலத்தில் சேற்றில் வாளை மீன்கள் துள்ளி விளையாடுகின்றன. அங்கு நாள்தோறும் உறைந்துள்ள பெருமான் பெருமிடுக்குடைய சக்கரத்தைக் கையில் தரித்துள்ளார். அவர் நித்திய சூரிகளுக்குத் தலைவனாவார். அவரைக் கண்டு என் மயக்கம் நீங்குவதற்குரியது மாற்றம் கொண்டருளீர் என்று பராங்குச நாயகி வேண்டுகிறாள்.

**போற்றி யான் இருந்தேன் புன்னை மேலுறை பூங்குயில்காள் !**
**சேற்றில் வாளை துள்ளும் திருவண் வண்டு ருறையும்**
**ஆற்றல் ஆழியங்கை அமரர் பெருமானைக் கண்டு**
**மாற்றம் கொண்டருளீர் மையல் தீர்வதொரு வண்ணமே (பா.3232)**

**ஆறாம் பத்து- எட்டாம் திருவாய்மொழி (3304-3314)**

ஆறாம் பத்து எட்டாம் திருவாய் மொழியில் உள்ள 11 பாசுரங்களில் பறவைக் கூட்டங்கள், வண்டு, கிளிக்கூட்டங்கள், தும்பி, கிளி, சிறிய பூவை, பாவை, குருகு, பெருநாரைக் கூட்டங்கள், அன்னம் ஆகியன தூது விடுக்கப்படுகின்றன.

பராங்குச நாயகி ஒரு சோலையிலே தங்கி இருந்தாள். பிரிவுத்துன்பத்தால் தளர்ந்திருந்தாள். பெருமானைக் காணாமையால் கண்ட பறவைகளை எல்லாம் தூது விடுக்கிறாள். இத்திருவாய்மொழி கலிநிலத்துறையில் அமைந்துள்ளது. பண்-குறிஞ்சி, தாளம்-ஏழொத்து, த்வஜாவந்தி இராகம்-ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.[6]

சிறந்த குணங்களை உடைய பறவைக் கூட்டங்களே! தீவினையேனாகிய நான் உங்களை இரக்கின்றேன். ஆதியில் எல்லா உலகங்களையும் முகில் வண்ணனாகிய கண்ணனே படைத்தான். அவன் என்னுடைய நலத்தையெல்லாம் கொண்டு சென்றுவிட்டான். என்னுடைய நிலையை அவனிடம் கூறுங்கள். அவ்வாறு சொல்ல நீங்கள் செய்த உதவிக்குக் கைம்மாறாகப் பரமபதத்தையும் மற்றுமுள்ள எல்லா உலகத்தையும் உங்களுக்கு நான் கொடுப்பேன் என்கிறார்.

**பொன்னுல காளீரோ புவனிமுழு தாளீரோ?**
**நன்னலப் புள்ளினங்காள் ! வினை யாட்டியேன் நான் இரந்தேன்**
**முன்னுல கங்களெல்லாம் படைத்த முகில்வண்ணன் கண்ணன்**
**என்னலங் கொண்ட பிரான் தனக்கு என் நிலைமை உரைத்தே (பா.3304)**

இத்திருவாய் மொழி பாசுரங்களில் செடிவைத்தவன் தண்ணீர் வார்ப்பது போல் படைத்த நீ அளிக்க வேண்டாவோ? உன் வடிவழகைக் காட்ட வேண்டாமோ? என்ற நிலையில் பராங்குச

நாயகியின் உள்ளக் குமுறல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**ஒன்பதாம் பத்து ஏழாம் திருவாய்மொழி 3623-3633**

ஒன்பதாம் பத்து ஏழாம் திருமொழியில் நாரை, குருகு, கொக்கு, மேகம், முகில், வண்டு, அன்னம் ஆகியன தூது விடுக்குவனவாக உள்ளன. தரவு கொச்சகக் கலிப்பாவால் அமைந்துள்ளது. பண்-நட்டராகம், தாளம்-ஏழொத்து, கண்டராகம், ஆதிதாளத்தில் பாடப்பட்டுள்ளது. திருகுழிக்களம் என்கிற மலைநாட்டுத் திருப்பதி பதிகமாகும்.[7]

பராங்குச நாயகி பெருமானின் திருக்குணங்களில் ஆழங்கால்பட்டவர். இதனால் இவருக்கு ஆற்றாமை அதிகரித்தது. திருமூழிக்களத்துப் பெருமானிடம் பறவைகளைத் தூதுவிடுக்கிறார். எம்பெருமான் நல்லவர்களைக் கைவிடமாட்டார். ஆகையால் என் நிலையை அவருக்கு அறிவித்தால் அவர் வருவார். பறவைகளே என் நிலையை அவருக்கு அறிவித்து உம்மைப் பிரிந்தார் தரிப்பாரோ என்று உரைத்து வர பராங்குச நாயகி தூது விடுக்கிறார்.

இத்திருவாய் மொழியின் இறுதிப்பாசுரம் ஏனையவை போல திருக்கடைக் காப்புப் பாசுரமாகவே அமைந்துள்ளது.

**வழுஇல்லா வண்குருகூர்ச் சடகோபன் வாய்ந்து உரைத்த**
**அழிவில்லா ஆயிரத்துஇப் பத்தும் நோய் அறுக்குமே** **(3633)** என்கிறது.

**முடிவுரை**

பராங்குச நாயகி நாயகியாக நின்று நம்மாழ்வார் மகள் பாடும் பாசுரங்களில் நான்கு திருமொழியில் தூதுவிடுக்கும் திருமொழிகளாக 44 பாசுரங்கள் உள்ளன. பிரிவின் துன்பத்தால், ஆற்றாமை நிலையில் பறவைகளைத் தலைவனிடம் தூது விடுக்கிறாள். நெஞ்சையும், மேகத்தையும், தூது விடுக்கிறாள். பிற்காலத்தில் தோன்றிய தூது இலக்கிய முன்னோடிப் பாசுரங்களாக உள்ளன. மதுரபக்தி நிலையில் அமைந்த இவை பண்டைய பண், தாளம் இன்றைய இராக தாளத்தொடு பாடப்பெற்றுள்ளன. ஒவ்வொரு பதிகத்திலும் திருக்கடைக் காப்பும், ஆயிரத்துள் இப்பத்தும் என்ற மகுடங்கள் சிறப்புடன் அமைந்துள்ளன. நாட்டியக்கலை வடிவம் பெறும் இப்பாசுரங்களைப் பண்ணொடு நாட்டிய வடிவில் நாம் அளிப்போம். ஒவ்வொரு திருவாய்மொழி இறுதியிலும் திருவாய்மொழி நூற்றந்தாதி வெண்பாவும் இடம் பெற்றுள்ளது.

**ஏங்காத லுக்கு அடிமால் ஏய்ந்தவடி வழகென்று**
**அங்காது பற்றாசா ஆங்கவன்பால்-எங்குமுள்ள**
**புள்ளினத்தைத் துதாகப் போகவிடு மாறன்தாள்**
**உள்ளினார்க்குத் தீங்கை அறுக்கும்**

**ஒன்பதாம்பத்து-ஏழாம் திருமொழி வெண்பா**

**சான்றாதாரங்கள்**

1. வே.ஆனந்தன், நம்மாழ்வார் பாசுரங்களில் உவமைகள், கதிரவன் பதிப்பகம், பாளையங் கோட்டை, 2009, பக்.6,7

2. பேராசிரியர் டாக்டர். ந. சஞ்சீவி(பதிப்.) வைணவ சமய நூல்கள் (கட்டுரை), தெய்வத்தமிழ், சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, 1975, முதல் பத்து, முதல்திருவாய் மொழி. பாசுரம் எண்.11
3. மேலது, ப.460
4. மேற்கோள் முனைவர்.இரா.வ.கமலக் கண்ணன் (உரையாசிரியர்), நாலாயிரத்திவ்விய பிரபந்தம் மூலமும் விளக்கவுரையும் தொகுதி 7, வர்த்தமானன் பதிப்பகம் வெளியீடு, பா எண்.3208-3209
5. மேற்கோள் முனைவர்.இரா.வ.கமலக் கண்ணன் (உரையாசிரியர்), நாலாயிர திவ்விய பிரபந்தம் மூலமும் விளக்கவுரையும் தொகுதி-8 வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, பா எண்.3880-3881
6. ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிர திவ்வியபிரபந்தம், மாயன் பதிப்பகம், சென்னை, ப.715
7. மேலது, ப.801